**<u>மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.</u>**

**<u>அசல் வழக்கு எண்.292/2020</u>**

முன்னிலை – பா.சரவணன், பி.எஸ்ஸி.பி.எல்.,
மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருச்சிராப்பள்ளி.

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 03 ஆம் நாள் செவ்வாய்கிழமை வாதி தரப்பில் முதலாவது சாட்சியின் வாக்குமூலம் (1969ம் ஆண்டு 54 விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி அமுதா, மொழிபெயர்ப்பாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பரிமளா | கணவர் பெயர் | : | ராஜா |
| ஜாதி | : | | கிராமம் | : | |
| வட்டம் | : | | மதம் | : | |
| தொழில் | : | | வயது | : | |

நாள் : 03.03.2026

**P.W. : 1**

**<u>1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>** கல்யாண சுந்தரம் என்பவருக்கு சகுந்தலா கொளுந்தியா வேண்டும். 2ம் பிரதிவாதியை எனது சித்தி, சித்தப்பா தத்து எடுத்ததாக சொல்லும் நிகழ்வு எப்போது நடந்தது என்றால் 1981 அல்லது 1982 காலகட்டத்தில் நடந்தது. அப்போது 2ம் பிரதிவாதிக்கு என்ன வயது என்றால் தெரியாது. அவர் 1957 இல் பிறந்தார். என் சித்தப்பா பாலசுப்ரமணியன் இரயில்வேயில் பணியில் இருந்தார். 2ம் பிரதிவாதி இரயில்வே பணிக்கு மனு செய்தாரா என்றால்

அது தெரியாது. தாவாச் சொத்திற்கு நான் வில்லங்கம் போட்டு பார்க்கவில்லை. தாவாச் சொத்திற்கு என் தகப்பனார் பெயருக்கு கிரைய பத்திரம் உள்ளதா என்றால் தாவா 2 வது அயிட்ட சொத்திற்கு உள்ளது. அந்த கிரைய பத்திரம் 1952 இல் ஏற்பட்டதாகும். இது தவிர என் தகப்பனார் 1946 இல் ஏதேனும் கிரையம் வாங்கியுள்ளாரா என்றால் எனக்கு தெரியாது. 1,2 பிரதிவாதிகளின் எதிர்வழக்குரையை படித்துப் பார்த்தேன். பிரதிவாதிகள் என் தந்தை 07.05.1986 இல் உயில் எழுதியதாக சொல்லியுள்ள விவரம் பற்றி வழக்கு போட்ட போது தான் தெரியும். அதற்கு முன்பு தெரியாது. வழக்கிற்கு பிறகே அந்த உயிலின் நகலை எடுத்து பார்த்தேன். ஏற்கனவே என் சகோதரர்கள் மீது ஸ்ரீரங்கம் நீதிமன்றத்தில் வழக்கு போட்டேனா என்றால் இல்லை. திருச்சி நீதிமன்றத்தில் என் சகோதரர்கள் மீது வேறு வழக்கு போட்டேன். சாமி கும்பிடுவது சம்மந்தமான பிரச்சனை தொடர்பாக அந்த வழக்கு போட்டேன். அந்த வழக்கு விசாரணை நீதிமன்றத்தில் எனக்கு விரோதமாக தள்ளுபடியானது என்றால் சரியல்ல. தாவாச் சொத்தான 2 வது அயிட்டம், 2 வது இனத்தில் உள்ள வீட்டை கட்ட 1ம் பிரதிவாதி கே.வி.பி-யில் கடன் வாங்கிய விவரம் தெரியும். அந்த கடன் எப்போது வாங்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. என் மகனுக்கும் 1ம் பிரதிவாதிக்கும் தான் தெரியும். கே.வி.பி வங்கியில் பால்பண்ணைக்காக வாங்கிய கடனும், வீடு கட்ட வாங்கிய கடனும் வேறு வேறு என்றால் சரிதான். பால்பண்ணைக்கு வாங்கிய கடனை நானும் என் மகனும் அடைத்தோம். அதை அடைத்ததை காட்ட என் மகனிடம் ஆவணம் உள்ளது. 1ம் பிரதிவாதி வீடு கட்டிய கிரஹபிரவேசத்திற்கு நான் போகவில்லை. அந்த வீடு 2014-2015 கால கட்டத்தில் கட்டப்பட்டது.

தாவா 1வது அயிட்ட சொத்தில் என்ன உள்ளது என்றால் எனது 7ம் தலைமுறை பாட்டன் எடுத்து வைத்த தெய்வம் உள்ளது. என் அப்பா அவரது 16 வயதிலிருந்து அந்த கோயிலை பார்த்து வந்ததாக சொல்லியுள்ளார். அந்த கோயிலில் என் அப்பா தான் பூஜை செய்வார். என் அப்பாவிற்கு பிறகு யார் பூஜை செய்வார்கள் என்றால் என் அப்பா கை,கால்கள் வராமல் போனதிலிருந்து எனது மேற்பார்வையில் எனது அண்ணன்கள் பூஜை செய்தார்கள். அந்த சமயத்தில் நான் தாத்தையங்கார் பேட்டையில் குடியிருந்தேனா என்றால் அங்கு போய் போய் வந்து விடுவேன். அங்கு குடியிருக்க எனக்கு வீடு இருந்தது. என் கணவர் என்னுடன் தான் இருந்தார். தாத்தையங்கார் பேட்டை வீட்டை 2ம் பிரதிவாதி நீலமேகத்திடம் விற்றுவிட்டேன். தாத்தையங்கார் பேட்டை வீடு எனக்கு எவ்வாறு பாத்தியம் என்றால் என் மாமனாரின் வீடு ஆகும். நான் பல ஆண்டுகளாக தாத்தையங்கார் பேட்டையில் தான் குடியிருந்தேன் என்றால் சரியல்ல. ராமானுஜன் மகன் கலியமூர்த்தி என்பவரை எனக்கு தெரியாது. சிதம்பரம் பிள்ளை மகன் சிவப்பிரகாசம் என்பவரை எனக்கு தெரியாது. உயிலை படித்து பார்த்து அதில் சொல்லப்பட்ட படி தான் ஒவ்வொரு வீட்டையும், 1,2 பிரதிவாதிகள் தனித்தனியாக அனுபவிக்கிறார்கள் என்றால் சரிதான். அந்த வீடுகளுக்கு நான் வரி கட்டவில்லை. அந்த வீடுகளை பிரதிவாதிகள் வைத்துக் கொள்வதாகவும், தோப்பில் ஒரு பகுதியை நான் வைத்துக் கொள்வதாகவும் பேசி முடித்தார்கள். ஆனால் அதன்படி எனக்கு எழுதி தரவில்லை. என் அம்மா இருக்கும் போதே 2002 இல் அவ்வாறு பேசப்பட்டது. அந்த வீடுகளுக்கான மின் இணைப்புகள் 1,2 பிரதிவாதிகள் பெயரில் உள்ளது என்றால் சரிதான்.

தாவா சொத்துக்கள் உயில் படி 1,2 பிரதிவாதிகளுக்கு தான் பாத்தியம் என்றும், அதை அவர்கள் தான் அனுபவிக்கிறார்கள் என்றும் சொன்னால் சரியல்ல. உயில் எழுதி வைத்த விவரம் எனக்கு முன்பே தெரியும் என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி.
திருச்சிராப்பள்ளி.